தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை

1993 ஏப்ரல் 16, வெள்ளிக்கிழமை.

சித்திரை 3, ஸ்ரீமுக—திருவள்ளுவர் ஆண்டு 2024

மாண்புமிகு பேரவைத் தலைவர் திரு. இரா. முத்தையா அவர்கள் தலைமையில் காலை 10–00 மணியளவில் பேரவை கூடியது.

மாண்புமிகு பேரவைத் தலைவர்:

''செயற்கை அறிந்தக் கடைத்தும் உலகத்து
இயற்கை அறிந்து செயல்.''

வினைகள் இயற்றும் முறைகளை நூல்களின் வாயிலாக நன்கு அறிந்து இருப்பினும், அவற்றைச் செய்யும்காலத்தில் அவ்வப்போது நடைபெறும் உலக நடைமுறைகளையும் அறிந்து அவற்றுக்குப் பொருந்துமாறு செய்ய வேண்டும்.

1. வினாக்கள்—விடைகள்.

உடுக்குறியிட்ட வினாக்கள்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா எண் 361, திரு. ஆர். ஈஸ்வரன், இருக்கையில் இல்லை.

வினா எண் 362, திரு. சி. சுவாமிநாதன்: மாண்புமிகு வருவாய்த் துறை அமைச்சர்.

362—

புதியதாக நிலம் வாங்குவோருக்கு பட்டா மாறுதல் செய்வதில் ஏற்படும் காலதாமதம்.

*15295—திரு. சி. சுவாமிநாதன்: மாண்புமிகு வருவாய்த் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவுக்கு விடையளிப்பாரா—

புதியதாக நிலம் வாங்குபவர்கள் பட்டா மாறுதல் செய்வதில் ஏற்படும் காலதாமதத்தை தடுக்க அரசு நடவடிக்கை எடுக்குமா?

மாண்புமிகு திரு. எஸ்.டி. சோமசுந்தரம், வருவாய்த் துறை அமைச்சர்: பேரவைத் தலைவர் அவர்களே,

TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY
TRUTH ALONE TRIUMPHS

[1993 ஏப்ரல் 16

பட்டா மாற்றும் இனங்களில் வருவாய் வட்ட மட்டத்தில் இம்மனுக்களில் இரண்டு மாதத்திற்குள் நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று ஆணையிடப்பட்டிருக்கிறது. அதைச் சரியாகச் செய்கிறார்களா இல்லையா என்பதுபற்றி மாவட்ட வருவாய்த்துறை அதிகாரி அடிக்கடி ஆய்வுசெய்து நடவடிக்கை எடுக்கிறார்கள்.

திரு. சி. சுவாமிநாதன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் இரண்டு மாத காலத்திற்குள் பட்டா மாறுதல் செய்யக்கூடிய நடவடிக்கை எடுத்திருப்பதாகச் சொன்னார்கள். ஆனால் ஒரு நிலத்தை பொறுத்தவரையில் விற்கிறவர்கள் வாங்குகிறவர்களுக்காக பட்டா மாறுதல் படிவத்தில் கையெழுத்து போட்டு, அதாவது அதை உடனடியாக மாறுதல் செய்ய வேண்டும் என்ற எண்ணத்தில் பட்டா மாறுதல் படிவத்தில் கையெழுத்துப் போட்டும்கூட இதனை பரிசிலனைக்காக வி.ஏ.ஓ., ஆர்.ஐ., தாசில்தார் போன்றவர்களிடம் அனுப்புகிறபோது அவர்கள் குறைந்தது 6 மாதகால அவகாசம் எடுத்துக் கொள்கிறார்கள். அதைக் குறைத்து மாண்புமிகு அமைச்சர் அவர்கள் குறிப்பிட்டது போல் இரண்டொரு மாதத்தில் அதாவது ஒரு குறிப்பிட்ட காலகட்டத்திற்குள் அந்தப் பட்டா மாறுதலைச் செய்து துரித நடவடிக்கை எடுக்கப்படுமா என அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. எஸ்.டி. சோமசுந்தரம் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இரண்டு மாதத்திற்குள் செய்ய வேண்டும் என்று அரசு அறிவுரை வழங்கி இருக்கிறது என்பதையும் இந்த அரசு வந்ததற்குப் பிறகுகூட 27-1-1992ல் மீண்டும் இதை மாவட்ட ஆட்சித் தலைவர்களுக்குத் தெரியப்படுத்தி இருக்கிறோம் என்பதையும் நான் தெரிவித்திருக்கிறேன். நிலத்தை விற்கிறவர்கள் கையெழுத்துப் போட்டுவாங்குகிறவர்களுக்கு பட்டா மாறுதல் செய்யலாம் என்று சொன்னபிறகும்கூட அதில் காலதாமதம் ஆகிறது என்று மாண்புமிகு உறுப்பினர் சொன்னார்கள். அப்படி ஏன் தாமதம் ஆகிறது என்கிறபோது அந்தந்த தனிப்பட்ட ஆய்வில்தான் அதைப் பார்க்க வேண்டும். 6 மாதம், 7 மாதம் ஆகிறது என்று சொன்னால் ஏன் அப்படி 6 மாதம், 7 மாதம் ஆகிறது என்பதைப்பற்றி நீங்கள் குறிப்பிட்ட இடத்தையும் சொன்னால் நான் கூட நேராக அந்தப் பட்டாவை வாங்கி, அந்த மனுவை வாங்கி ஏன் காலதாமதம் செய்கிறார்கள் என்பதைக் கண்டு பிடித்து இந்த மாதிரியான காலதாமதம் செய்யக்கூடாது என்பது குறித்து மீண்டும் ஒரு விளக்கமான சுற்றறிக்கை மாவட்ட ஆட்சித் தலைவருக்குச் செய்ய முடியும். அதாவது 2 மாதங்களுக்கு மேல் ஏன் போனது என்பதற்கு சரியான காரணம் இல்லாவிட்டால். ஆனால் காலதாமதம் ஆவதற்கு என்ன காரணம் என்றால் சில நேரங்களிலே நிலத்தை

1993 ஏப்ரல் 16]

விற்பவர்கள், வாங்குகிறவர்கள் என்று வருகிறபோது அந்த விற்பவர்களுக்குச் சரியான உரிமை இருக்கிறதா என்று பார்க்காமல் கூட வாங்கி விடுகிறார்கள். சில நேரங்களில் நாம் வாங்கிக் கொள்வோம், பின்னாலே பார்த்துக் கொள்வோம் பட்டா வாங்கிக் கொண்டு கோர்ட்வரைக்கும் போவோம், ஆள் பலத்தை வைத்து இதை அபகரித்துக் கொள்வோம் என்ற உணர்வு கூட சிலருக்கு இருக்கிறது. ஆகவேதான் பட்டா மாற்றும்போது இவைகளை எல்லாம் ஆய்ந்து பார்க்க வேண்டி இருக்கிறது. நீங்கள் சொல்கிறபடி 6 மாதம் ஆகி இருக்கிறது என்று சொன்னால் அதைப்பற்றிப் பார்க்க வேண்டும். அதிலே வருவாய்த்துறை அதிகாரிகள் செய்தது தவறு என்றால் அதைப்பற்றிக் குறிப்பிட்டு, இந்தக் குறிப்பிட்ட இடங்களில் இந்தமாதிரி செய்திருக்கிறார்கள், எனவே இந்தமாதிரி செய்யக் கூடாது என்று அந்தக் குறிப்பிட்ட விவரத்தையும் எழுதி எல்லா வட்டாட்சியருக்கும் அறிவுறுத்தப்படும்.

முற்பகல் 10-05

திரு. சி. சுவாமிநாதன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் ஒரு விளக்கத்தை கொடுத்து இருந்தாலும்கூட ஒருவர் நிலம் விற்கிறபோது, அதை இன்னொருவர் வாங்குகிற உரிமை—ஏதோ ஒரு அடிப்படை உரிமையை வைத்துத்தான் அந்த நிலம் விற்கப் படுகிறது. அப்படி ஏதாவது பிரச்சினை வருகிறபோது அதை மறுக்கிறவர்கள் சில நேரங்களில் கோர்ட்டுகளுக்கு சென்று ஸ்டே வாங்கி அது சம்பந்தமாக வழக்குகளும் நடைபெறுகிறது. அப்படி வழக்குகளில் தாமதம் ஏற்படுவதைப் பொறுத்துக் கொள்ளலாம். ஆனால் இயற்கையாகவே சாதாரணமாக அந்தப் பட்டா மாறுதல் வருகிறபோது, இதில் ஒருவர் நிலம் வாங்குகிறார், ஒருவர் நிலம் விற்கிறார், அவர் பட்டா மாறுதல் கையெழுத்துப்போட்டு விடுகிறார்கள். ஆனால் வி.ஏ.ஒ., தாசில்தார் மற்றும் ஆர்.ஐ. போன்றவர்கள் இதை மறு ஆய்வு செய்வதன் மூலம் இதை அவர்கள் தடுத்து நிறுத்திவிட முடியுமா அல்லது அவர்களுக்கு அந்த உரிமை இருக்கிறதா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. எஸ்.டி. சோமசுந்தரம் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பதிவு செய்து விட்டால் மட்டும் அந்த நிலம் அவர்களுக்கு சொந்தமாகிவிடாது. யாருடைய நிலத்தையும் யாரும் விற்றுவிடலாம். ஆனால் பட்டா வாங்கின பிறகு கோர்ட்டுக்குப் போகிறபோது, அந்த பட்டா இருப்பதனாலேயே கோர்ட்டு தீர்ப்பு கூறுவதில்லை. ஆனால் பட்டா இருந்தால் possession is the nice point of the law என்று சொல்வதுபோல, அந்த பட்டா இருந்தால் கொஞ்சம் சாதகம் ஏற்பட்டுவிடும். பட்டா

இருந்தால் கொஞ்சம் சாதகம் ஏற்படும் என்பதாலே அதை ஆய்ந்து பார்க்க வேண்டியிருக்கிறது. அதனால்தான் குறிப்பிட்ட ஒன்றிரண்டைச் சொன்னால் அதை எப்படி செய்து இருக்கிறார் என்பதைப் பார்த்து உங்கள் மூலமாக நாட்டிலுள்ள மற்றவர் களுக்கும் நன்மை செய்வதற்கு நான் தயாராக இருக்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் ; திருமதி ஜீனத் சர்புதீன்.

திருமதி ஜீனத் சர்புதீன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பட்டா மாற்றும்போது ஒரு சின்ன ஸ்பெல்லிங் மிஸ்டேக்கினாலே, 'சின்ன வாப்பா'' என்பதற்குப் பதிலாக 'சீனி வாப்பா' என்று வந்துவிட்டது. அப்போது அதை கேட்டதற்கு சிவிலுக்குப் போ என்று சொல்லி மிகக் கஷ்டப் பட வேண்டிய ஒரு சூழ்நிலை வந்ததில், எனக்கே அது வந்தது. ஆகையினால் இப்படி கஷ்டப்படாமல் அரசு ஏதாவது சுலபமான முறையை கையாள முன் வருமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. எஸ். டி. சோமசுந்தரம் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அந்தப் பெயர்களைச் சொல்கிறபோது நாம் எப்படி பெயர்களைக் குறிப்பிட்டாலும் அது ஆவணங்களில் வருகிறபோது, பெயர்களை எழுது கிறபோது, அந்த வேர்ட், ஸ்பெல் தி வேர்ட், ஒரு வார்த்தை அது தமிழாக இருந்தாலும் ஆங்கிலமாக இருந்தாலும் எழுதுகிறபோது, அந்த எழுத்துக்கள் மாறாமல் இருக்க வேண்டும். இல்லாவிட்டால் நீதிமன்றத்திற்குப்போய் சில தவறு ஏற்படுகிறது. ஆகவே அதை ஆய்வு செய்து ஒழுங்காக செய்ய வேண்டும் என்பதற்காக சொல்கிறார்கள். அப்படி உங்கள் பெயரை 'நான் மாற்றிக் கொடுத்து விட்டேன்' என்று சொல்லிவிட்டால் அதற்கு மேல் மற்றொரு சர்டிபிகேட் வாங்கி தன்னுடைய பெயர் இதுதான். இந்தப் பெயர் போட்டு அலையஸ் இப்படி இரண்டு பேரும் கூப்பிடுவார்கள் என்று சொன்னால் அதை மாற்றிக் கொடுப்பார்கள்,

மாண்புமிகு பேரவைத் தலைவர் : திரு. சி. இராமசுவாமி.

திரு. சி. இராமசுவாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, விவசாயிகள் நிலம் கையகப்படுத்தி வாங்கி பல மாதங்கள் ஆகியும் பட்டா கிடைக்காமல் வருவாய் வட்ட ஆட்சியரிடம் போய் அலைகிறார்கள். எனவே அரசாங்கம் ஒரு புதிய யுக்தியை கையாண்டு கிரையம் வாங்கிய ஒரு மாத காலத்திற்குள் கன்டிஷனாக பட்டா கொடுக்க வேண்டும் என்று ஆணை பிறப்பிக்க முன்வருமா என்று அறிய விரும்புகிறேன். காலம் கடத்தினால் அவர்கள் ஸ்டே வாங்கி விடுகிறார்கள். எனவே அரசாங்கம் இந்த விவசாயிகளுடைய கஷ்டத்தைப்

புரிந்துகொண்டு கன்டிஷன் ஆர்டர் ஒரு மாதத்திற்குள் பட்டா கொடுக்க வேண்டுமென்று வருவாய் வட்ட ஆட்சியருக்கு ஆணைப் பிறப்பிக்க முன்வருமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. எஸ்.டி. சோமசுந்தரம் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, முதலிலே கேட்ட சட்டமன்ற உறுப்பினர் சாமிநாதன் அவர்களுக்கு எந்த பதிலை சொன்னேனோ அதே பதிலை அவருக்குத் திருப்பிச் சொன்னதாக எடுத்துக் கொள்ளவும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : திரு. ஆர். சிங்காரம்.

திரு. ஆர். சிங்காரம் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நம்முடைய மாண்புமிகு வருவாய்த்துறை அமைச்சர் அவர்கள் தெளிவான விளக்கத்தைச் சொன்னார்கள். ஆனாலும் தமிழக அரசு எந்த ஆட்சி வந்தாலும் அந்த ரெவின்யூ துறையில் இப்படியெல்லாம் செயல்பட வேண்டும் என்று அறிவுரை வழங்குகிறார்கள். இந்த அரசு பொறுப் பெற்ற பிறகு பட்டாக்களை உடனடியாக மாற்றிக் கொடுக்க வேண்டும், இதுபோன்ற சிரமங்களை மக்களுக்குக் கொடுக்கக் கூடாது என்று அரசாணை கொடுத்திருக்கிறார்கள். ஆனால் நடைமுறையில் அது சாத்தியப்படவில்லை. அது ஒரு தனி ராஜியம்போல நடந்து கொண்டிருக்கிறது. ஆகவே அதை நீங்கள் விசேஷமாக கண்காணிக்க வேண்டும் என்பதற்காக சுட்டிக் காட்ட ஆசைப்படுகிறேன். அதுகூட இதை சுலபமாகச் செய்வதற்கு இன்னும் ஒரு வழியை இந்த அரசு வந்தவுடன் பட்டா பாஸ் புத்தகம் .கொடுக்க திட்டமிட்டு ஒரு ஏற்பாடு செய்து கொண்டிருக்கிறார்கள். அதை விரைவில் கொண்டு வந்தால்கூட அதை ரிஜிஸ்டர் செய்தவுடன் அந்த பட்டா பாஸ் புத்தகத்தில் பதிந்த அந்த பட்டா மாறுதலையும் உடனடியாக செய்து கொடுக்க வேண்டும் என்ற ஆணையை சேர்த்துப் பிறப்பித்தால் இந்தப் பிரச்சினைக்குத் தீர்வு காண முடியும். அதை அரசு உடனடியாக பரிசீலித்து பட்டா பாஸ் புத்தகங்களை கொடுப்பதன் மூலம் இன்றைக்கு விரைவான தீர்வு காண்பதற்கு தக்க நடவடிக்கை அரசு .எடுக்குமா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. எஸ். டி. சோமசுந்தரம் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, வருவாய்த் துறையினுடைய மானியக் கோரிக்கையில் பட்டா பாஸ் புத்தகம், பற்றி மாத்திரம் அதிகமான நேரம் எடுத்துக்கொண்டு அதை விளக்கியிருக்கிறேன். நான். அது மட்டுமல்ல ஆங்காங்கே தவறு நடக்கிறது என்று பொதுவாகச் சொல்கிறார்கள். நான் தவறே நடக்கவில்லையென்று சொல்ல

வில்லை. ஆனால் எனக்கு இருக்கிற ஆசை, உங்களுக்கு இருக்கிற ஆசையைவிட அதிகமாக இல்லாவிட்டாலும் குறைவாக இல்லை. இந்தத் துறை நல்ல நிர்வாகம் உள்ள துறையாக மக்களுக்குப் பணி செய்கிற துறையாக ஆக்கப்பட வேண்டுமென்ற கவலை உங்களுக்கு இருக்கிறதைவிட எனக்கும் இந்த அரசுக்கும் குறைவாக இல்லை என்பதை நான் பணிவன்புடன் தெரிவித்துக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன். அதேநேரத்தில் எங்களுக்கு சொல்கிறபோது இன்னின்ன இடத்தில், இன்னின்ன தவறுகள் நடக்கின்றன என்று சொல்ல வேண்டும். நான் ஒரு அதிகாரியைக் கூப்பிட்டு ஆய்வு செய்கிறபோது நீ ஏன் இதை இப்படி செய்கிறாய் என்று கேட்பதற்கும், என்னை பலப்படுத்துவதற்கும், என்னைக் கொஞ்சம் விவரம் தெரிந்தவனாக ஆக்குவதற்கும் அது உதவும். அதிகாரியைக் கூப்பிட்டு ஏன் இதை செய்யவில்லை என்று கேட்டால் அப்பொழுதுதான் செய்வேன் அல்லது செய்யவில்லை என்று சொல்ல முடியும். ஆகவே, என்னைக் கொஞ்சம் விவரம் தெரிந்தவனாக ஆக்குவதற்கு எங்கெங்கே தவறு நடக்கிறது என்று என்னிடத்தில் சொன்னால் நான் அதை மறுபடியும் கேட்டு அதை எல்லாம் தெரிவிப்பதற்கு கடமைப்பட்டிருக்கிறேன்.

முற்பகல் 10-10

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா எண் 363. திரு. ப. ரங்கநாதன், மாண்புமிகு கல்வி அமைச்சர்.

363—

புரசைத் தொகுதியில் அரசு அங்கீகாரம் பெற்ற தனியார் மேல்நிலைப் பள்ளிகள்

*10397—திரு. ப. ரங்கநாதன்: மாண்புமிகு கல்வி அமைச்சர் கீழ்க்காணும் வினாவுக்கு விடையளிப்பாரா—

புரசைத் தொகுதியில் அரசு அங்கீகாரம் அளித்துள்ள தனியார் மேல்நிலைப்பள்ளிகள் எத்தனை?

மாண்புமிகு டாக்டர் செ. அரங்கநாயகம், கல்வி அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

38 பள்ளிகள்.

திரு. ப. ரங்கநாதன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள், எம்.ஏ. எம்.எட். படித்து மேல்நிலைப் பள்ளியில்